**சுருக்கம்**

தொடக்கக் கல்வி - கருணை அடிப்படை நியமனம் - திரு.ஆர். முத்துக்குமார். தந்தை பெயர் (லேட்) திரு.எம்.இராமஜெயம் - தமிழ்நாடு அமைச்சுப் பணி - பள்ளிக் கல்வித் துறை 7.12.95 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நியமனம் - பணிவரன்முறைபடுத்தி - அரசு ஆணையிடுகிறது.

**பள்ளிக் கல்வித் துறை**

**அரசாணை (3D) எண்.4** **நாள் 27.1.99**

**படிக்கப்பட்டவை**

1. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித எண்.161483/ஜே3/97. நாள் 19.1.98
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடித எண்.6773/சிடி.பி1/98. நாள் 12.10.98

****

**ஆணை**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு வழங்கும் திட்டப்படி திரு.ஆர். முத்துக்குமார் என்பவரை இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் 7.12.95 முற்பகல் முதல் முறையாகப் பணி அமர்த்தி ஆணையிடும்படி பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். தற்காலிகமாகப் பணி அமர்த்தப்பட்டவரின் தந்தை திரு.எம்.இராமஜெயம் என்பவர் வேதாரண்யம் ஒன்றியம், பட்டினத்தெரு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் ஹையர் கிரேடு ஆசிரியராக பணியில் இருக்கும்போது 6.1.87 அன்று காலமானார் என்றும், அவர் தகுதிகாண் பருவம் முடித்தவர் என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.ஆர். முத்துக்குமார் கருணை அடிப்படையில் பணி வாய்ப்பு கேட்டு விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 1.7.74 என்றும், அவர் மேனிலைக் கல்வி தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவருக்கு பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் தடை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்து அன்னாரின் பணியை வரன்முறை செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையை அரசு நன்கு ஆய்வு செய்தது. கருணை அடிப்படையில் பணி வாய்ப்பு வழங்கும் திட்டப்படி இளநிலை உதவியாளராக பணி அமர்த்தப்பட்ட திரு.ஆர். முத்துக்குமார் தந்தை பெயர் (லேட்) திரு.எம்.இராமஜெயம் என்பவரை தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளராக 7.12.95 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக முறையாகப் பணியமர்த்த, தமிழ்நாடு அரசுப்

பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறை விதி 16(ஆ)வின் பிற்பகுதியின்படி தேர்வாணையம் இசைவு அளித்துள்ளது.

3. எனவே வேதாரண்யம் ஒன்றியம், பட்டினச்சேரு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் ஹையர் கிரேடு ஆசிரியராக பணியில் இருக்கும்போது காலமான திரு.எம்.இராமஜெயம் என்பவரின் மகன் திரு.ஆர். முத்துக்குமார் என்பவரை தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளராக 7.12.95 முற்பகல் முதல் கருணை அடிப்படையில் முறையாகப் பணியமர்த்த, அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனும் அரசு முடிவு எடுத்துள்ளது. இவ்வாறு முன் நாளிட்டு முறையாகப் பணி அமர்த்தப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவைகளை பெறத் தகுதி உடையவராகிறார்.

4. மேற்குறிப்பிட்ட திரு.ஆர். முத்துக்குமார் என்பவரை 7.12.95 முற்பகல் முதல் முறையாகப் பணி அமர்த்தும்பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தொகுதி நடைமுறைநூல் 1987ன் ஒன்றாவது தொகுப்பில் காணப்படும் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், இரண்டாம் பகுதியில் உள்ள 48வது விதியின்படி பெற்றுள்ள அதிகாரத்தின்படி தமிழக ஆளுநர் இதன் மூலம் ஆணையிடுகிறார்.

5. இந்த அரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் 743/ என்.1./99-1எண்ணும் 11.1.99 நாளிட்ட அலுவல் சார்பற்ற குறிப்பில் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.ஏ.தெளஃபீக்தர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.(இணைப்புடன்)
தனியர் - பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக
செயலாளர், தமிழ்நாடு தேர்வாணையம்,சென்னை-2.
பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

ATTESTED

உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்
தலைஞாயிறு - 614 712

ATTESTED

உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்
தலைஞாயிறு - 614 712